**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.3451/ஆ5/2024, நாள். 25/10/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2025ஆம் கல்வியாண்டு – பள்ளி அளவிலான இலக்கிய மன்ற போட்டிகள் – EMIS தளத்தில் பதிவுகள் மேற்கொள்ள 29.10.2024 பிற்பகல் 12.00 மணி வரை நீட்டித்தல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.066737 /எம்1/எஸ்1/2024, நாள். .10.2024
2. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டு நலப்பணித்திட்டம்) கடித ந.க.எண்.066737/எம்1/எஸ்1/2024, நாள். 24.10.2024

.....

பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளைப் பின்பற்றி 2024–2025ஆம் கல்வியாண்டிற்கான 6 முதல் 9ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலக்கிய மன்றம் (தமிழ் & ஆங்கிலம்) மற்றும் வினாடி வினா போட்டிகளை பள்ளி அளவில் நடத்தி முடித்து EMIS தளத்தில் உரிய காலக்கெடுவிற்குள் பதிவேற்றம் செய்திட தெரிவிக்கப்பட்டது. இதில் இலக்கிய மன்றம் பள்ளி அளவில் 14.10.2024 முதல் 16.10.2024 வரை நடத்தி முடிக்கப்பட்டு 18.10.2024க்குள் EMIS தளத்தில் பதிவுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மழை காரணமாக சில மாவட்டங்களில் விடுமுறை அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து பள்ளி அளவிலான இலக்கிய மன்ற போட்டிகள் நடத்தி EMIS தளத்தில் 29.10.2024 பிற்பகல் 12.00 மணிக்குள் பதிவேற்றம் செய்திட காலஅவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது என பார்வை 2–ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பள்ளி அளவிலான இலக்கிய மன்றம் போட்டிகளின் பங்கேற்பாளர் மற்றும் வெற்றியாளரின் விவரங்களை EMIS தளத்தில் 29.10.2024 பிற்பகல் 12.00 மணிக்குள் தவறாமல் பதிவேற்றம் செய்திட அனைத்து நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது. EMIS தளத்தில் பள்ளிகள் உள்ளீடு செய்வதை பள்ளித் துணை ஆய்வாளர்கள் உறுதி செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வை 2–ன் கடித நகல்

25.10.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை) வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) வேலூர் மாவட்டம்.
3. மாவட்ட உதவி திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம் (மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் மூலமாக)
5. பள்ளித் துணை ஆய்வாளர்கள், (முதன்மைக் கல்வி அலுவலகம் / இடைநிலைக் கல்வி) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல் –
அனைத்து நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.
(சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)